DINAMANI-17-MAR-2020

# உலகம் முழுவதும் ஈஷா யோக மைய நிகழ்ச்சிகள் ரத்து

**கோவை, மார்ச் 16:** கரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக ஈஷா யோக மையம் சார்பில் உலகம் முழுவதிலும் நடைபெறவிருந்த அனைத்து நிகழ்ச்சிகளும் மறுதேதி குறிப்பிடப்படாமல் ரத்து செய்யப்படுவதாக ஈஷா யோக மையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

கரோனா வைரஸ் பரவாமல் தடுக்க ஈஷா யோக மையம் சார்பில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக ஈஷா யோக மையத்தின் நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ், மும்பையில் நடத்தவிருந்த 'இன்னர் என்ஜினீயரிங்' நிகழ்ச்சியும், ஏப்ரலில் அவர் மேற்கொள்ளவிருந்த தென் ஆப்பிரிக்க பயணமும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மேலும், யோகா வகுப்புகளை நடத்துவதற்காகப் பயணிக்கும் யோகா ஆசிரியர்களும் தங்கள் பயணங்களை உடனடியாக நிறுத்தி வைத்துள்ளனர்.

கோவை ஈஷா யோக மையத்துக்கு வரும் அனைவரும் மருத்துவப் பரிசோதனைக்குப் பிறகே அனுமதிக்கப்படுகின்றனர். ஈஷா யோக மையத்தில் தங்கி இருப்பவர்களுக்கு 3 நாள்களுக்கு ஒரு முறை மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளது. ஈஷாவில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள், பாதுகாவலர்கள், பிற களப் பணியாளர்களுக்குத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுதவிர, ஈஷா மையத்துக்கு வெளிப்புறம் அமைந்திருக்கும் ஆதியோகியைத் தரிசிக்க வரும் மக்களும் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். ஈஷா யோக மையத்துக்கு வர திட்டமிட்டுள்ளவர்களுக்கு மத்திய அரசு வெளியிட்டுள்ள பயண ஆலோசனையின் அடிப்படையில் வழிகாட்டு நெறிமுறைகள் அனுப்பப்பட்டுள்ளன என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.